OP 23/2023
பெயர் அருண்
ம.சா.1

Dated 12.12.2024.

<u>குறுக்கு விசாரணை</u>

எனது திருமணம் 28.10.2012 ல் சுருளிபட்டி ஆர்த்தி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் அவர்கள் சின்னமனூரில் அண்ணா பள்ளியில் படித்து வருகிறார்கள். திருமணத்தின் போது கதவு எண்.502 வார்டு 1, நேருஜி காலனி, சுருளிபட்டியில் குடியிருந்து வந்தேன். திருமணத்தின் போது எனக்கு 5 பவுனும், என் மனைவிக்கும் 30 பவுன் போட்டார்கள். நான் என் மனைவிக்கு பரிசம் போடும் போது 10 பவுன் நகை போட்டேன். நான் தற்சமயம் அருண் மோட்டார்ஸ் என்ற பெயரில் இருசக்கர வாகனங்களை வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். கந்துவட்டி கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்திற்கு பைனான்ஸ் செய்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் ரூ.5,00,000/- வரும் என்றால் சரியல்ல. ரூ.40,000/- வரும். கம்பத்தில் வார்டு 32, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் தெருவில் எனக்கு சொந்தமாக வீடு உள்ளது. தொழில் கம்பத்தில் இருந்ததாலும் குழந்தைகள் படிப்பிற்காகவும் சுருளிபட்டியிலிருந்து கம்பம் வந்தேன். சுருளிபட்டியில் நாங்கள் கூட்டுக்குடும்பமாக தான்இருந்தோம். கம்பத்தில் தனியாக தான் இருந்தோம். கம்பத்திற்கு என் பெற்றோர்கள் அடிக்கடி வந்து செல்வார்கள் என்றால் சரியல்ல. என் மாமியார் தான் வருவார். என் சகோதரி மாலதி என் வீட்டிற்கு அருகில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. இ ரண்டு தெரு தள்ளி குடியிருந்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றும் என் வீட்டிற்கு அருகில் தான் குடியிருந்தார் என்றால் சரியல்ல. என் சகோதரி மாலதி எப்பொழுதுமே என் வீட்டில் தான் இருப்பார் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு வரவே மாட்டார். கம்பத்தில் 5 செண்டு இடம் என் தாயார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அது அவர் பெயரில் வாங்கினார். என் மனைவியின் நகையை அடகு வைத்து தான் என் அம்மா பெயரில் நிலம் வாங்கினேன் என்றால் சரியல்ல. என் மனைவியின் நகை பெரும்பாலும் என் சகோதரி மாலதி கையில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என் மனைவி வீட்டை விட்டு செல்லும் போது எடுத்துச்சென்றுவிட்டார். பரிசம் போட்ட நகையையும் சேர்ந்து எடுத்துச்சென்றுவிட்டார். நான் என் சகோதரி மாலதி என்ன சொல்கிறாரோ அதைத்தான் நான் கேட்பேன் என்றால் சரியல்ல. என் அத்தை என்ன துற்போதனை செய்தார் என்றால் என் குழந்தைகளை வெளியில் அழைத்து

செல்லவிடமாட்டார். என் மனைவையியை அடிக்கடி சின்னமனூர் அழைத்து சென்றுவிடுவார். என் பெற்றோர்களிடம் என் குழந்தையை காட்ட விடமாட்டார். எனக்கு இரண்டாவது திருமணம் செய்து அந்த மனைவியின் மூலம் ஒரு குழந்தை உள்ளது என்றால் சரியல்ல. நான் இரண்டாவது திருமணம் செய்யவில்லை. கேரளாவில் 40 ஏக்கர் ஏலக்காய் தோட்டம் உள்ளது என்றால் சரியல்ல. 5 ஏக்கர் குத்தகைக்கு எடுத்து என் தந்தை நடத்தி வந்தார். என் தந்தை இறந்த பின்னர் என் அம்மா பார்த்து வருகிறார். குத்தகை என் தந்தை பெயரில் தான் உள்ளது. நான் என் அக்காவின் பேச்சைக் கேட்டுகொண்டு என் மனைவியை அடிக்கடி அடித்து கொடுமைபடுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி 05.08.2021 என்னை விட்டு பிரிந்து சென்றுவிட்டார். நான் என் மனைவியிடம் அடிக்கடி கூடுதல் வரதட்சணை கேட்டு மனதளவில் கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. 05.08.2021ல் நான் மாமானார் இறந்ததற்கு வந்த ரூ.30,00,000 பணத்தை கேட்டு அதைை கேட்டு கொடுக்காததால் வீட்டை விட்டு விரட்டிவிட்டேன் என்றால் சரியல்ல.என் மனைவி வீட்டில் இருந்து 100 பவுன் தங்க நகை, ரூ.8,00,000/- ரொக்கம் சுமார் ரூ. 10,00,000/-க்கு மேல் சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. 30 பவுன் நகை தான் போட்டார்கள். ஏதாவது முக்கியமான நிகழ்ச்சியில் நான் கூடுதல் நகை கேட்டு என் மனைவியை தொந்தரவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் அதிக வரதட்சனை கேட்டதாலும், இரண்டாவது திருமணம் செய்ததாலும் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவி விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறார் என்றும் ஆனால் 100 பவுன் நகையை திரும்ப தந்தால்தான் விவாகரத்து கொடுப்பார் என்றால் சரியல்ல. என்னிடம் அவர் நகை எதுவும் கிடையாது. என் மனைவியின் வீட்டை நான் அடிக்கடி எழுதி கேட்டேன் என்றால் சரியல்ல.